மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்

அசல் வழக்கு எண்.236/2015

2018-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் நாள் வாசா.4 சாட்சி என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுவர், 1983-ம் ஆண்டு 54-வது சட்டப்பிரிவு 6(2) ஏற்பாட்டின் படி திரு.ஜி.கிருஷ்ணன், பி.ஏ., எல்.எல்.பி., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மனோகரன் | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலூக்கா | : | தொழில் | : |

முதல் விசாரணை

கதவு எண்.46, தண்டுமாரியம்மன் கோவில் வீதி, வடக்கு பேட்டை, சத்தியமங்கலம் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் பத்திர எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். சின்ராஜ் என்பவர் எழுதிக் கொடுத்த உயில் சாசனத்தினை நான் எழுதினேன். அது சம்மந்தமாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது அலுவலகத்தில் வைத்து எழுதினேன். 20.06.2003 தேதியில் எழுதினேன். சின்ராஜ் என்பவர் ரவிராஜ் மற்றும் குணசேகரனுக்கு உயிலை எழுதி கொடுத்தார். தற்போது காட்டப்படும் உயில் ஆவணம் தான் நான் எழுதியது. அதில் எழுதியவர் என்ற இடத்தில் நான் தான் கையெழுத்து போட்டுள்ளேன். அந்த ஆவணம் ஏற்கனவே வா.சா.1-ன் மூலம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. உயில் சாசனத்தை எழுத எனது அலுவலகத்திற்கு வரும் போது, ஏ.ஓ.சின்னராஜ் நல்ல மனநிலையில் இருந்தார். அவர் சொல்லி உயில் எழுதினேன். அந்த உயில் எழுதுவதற்கு சொத்து சம்மந்தமான பத்திரங்களை கொண்டு வந்து காட்டினார். வெள்ளைத்தாளில் முதலில் அவர் சொன்ன வாசகம் எழுதப்பட்டு, அவர் படித்து பார்த்த பின்னர் சரி என்று சொன்னதால் தான் அந்த விபரங்கள் உயில் சாசனத்தில் தட்டச்சு செய்யப்பட்டது. அதன் பின்னிட்டும் படித்து பார்த்து தான் என் முன்னிலையில் கையெழுத்து போட்டார். உடனிருந்த சாட்சிகளும் அந்த உயில் ஆவணத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டார்கள். அதன் பின்னிட்டு தான் உயில் ஆவணத்தை தயாரித்தவர் என்ற இடத்தில் நான் கையெழுத்து போட்டேன்.

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் சுமார் 20 வருடங்களாக பத்திர எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். குறிப்பிட்ட ஆவணங்களை மட்டும் தான் எழுதி பதிவு செய்வேனா? அல்லது அனைத்து வகையான ஆவணங்களையும் எழுத் தெரியுமா? என்றால் முடிந்தவரை அனைத்து ஆவணங்களையும் எழுதுவேன். ஆவணங்களை எழுதி பதிவு செய்வது சம்மந்தமாக ஏதேனும் குறிப்புகள் எழுதி வைப்பேனா? என்றால் இல்லை. இது வரை சுமார் எவ்வளவு ஆவணங்கள் எழுதி வைத்திருப்பேன் என்றால் 1000, 1500 ஆவணங்கள் எழுதி வைத்திருப்பேன். அதில் எவ்வளவு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் குறிப்பாக சொல்ல இயலாது. குறிப்பாக ஒவ்வொரு வருடமும் எவ்வளவு ஆவணங்கள் எழுதுவேன், அதில் எவ்வளவு ஆவணங்கள் பதிவு செய்யப்படும் என்ற விபரம் சொல்ல முடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. வருடத்திற்கு 200 ஆவணங்கள் எழுதுவேன். இது வரை நான் சுமார் 200 லிருந்து 250 உயில் ஆவணங்களை எழுதியிருப்பேன். எந்தெந்த தேதியில், எந்தெந்த வருடம் யார்? யார்? சொல்லி உயில் எழுதப்பட்ட விபரம் சொல்ல இயலாது. அவ்வாற சூழ்நிலையில், இந்த உயில் மட்டும் எந்த தேதியில், யாரால் எழுதப்பட்டது என்ற விபரம் எப்படி குறிப்பிட்டு சொல்ல முடிந்தது என்றால் இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையில் ஏ.ஓ.சின்னராஜ் கடந்த 20.06.2003 தேதியில் குணசேகரன் மற்றும் ரவிராஜ் மீது எழுதி வைத்த உயில் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நான் சொன்னேன். ஆவணங்களை நான் தான் தயார் செய்வேன். வருபவர்கள் தயார் செய்து கொடுப்பதை நான் சரி செய்து கொடுக்க மாட்டேன். 20.06.2003 தேதிக்கு முன்பு இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட உயில் சாசனத்தை எழுத ஏதாவது எனக்கு தகவல் சொல்லப்பட்டதா? என்றால் இல்லை. 20.06.2003 தேதி தான் உயில் சாசனம் எழுதுவதற்கு எங்கள் அலுவலகத்திற்கு முதன் முதலாக வந்தார்கள். அதற்கு முன்பு இது சம்மந்தமாக யாரும் வரவில்லை. ஏற்கனவே ஏ.ஓ.சின்னராஜோ, குணசேகரன் மற்றும் ரவிராஜோ வேறு பத்திரங்கள் எழுதிய வகையில் எனக்கு பழக்கமானவர்களா? என்றால் அவர்கள் எனக்கு பழக்கமானவர்களே அல்ல. வேறு எந்த பத்திரங்களையும் நான் அவர்களுக்காக எழுதிக் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட உயில் சாசனத்தில் உள்ள வாசகங்களானது ஏ.ஓ.சின்னராஜ் சொல்லி எழுதப்பட்டதா? அல்லது என்னால்

உருவாக்கப்பட்டதா? என்றால் சொத்து பற்றிய விபரங்களை ஏ.ஓ.சின்னராஜ் சொன்னார், மற்ற வாசகங்களை பத்திர எழுத்தராகிய நான் தான் போட்டு எழுதினேன். அந்த உயில் சாசனத்தை அன்றே எழுத வேண்டுமென்ற அவசர நிலை ஏதேனும் இருந்ததா? என்றால் இல்லை. அவர்கள் ஏதேனும் உயில் சாசனத்தை அன்றே எழுத வேண்டுமென்று கட்டாயப்படுத்தனார்களா? என்றால் இல்லை. சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை என்னிடம் கொடுத்தது யார் என்றால் சின்ராஜ் தான் கொடுத்தார். அந்த ஆவணம் தயார் செய்யப்பட்ட கால கட்டத்தில், என்னிடம் ஆவணங்களை கொடுத்தவர் சின்ராஜ்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள புகைப்படமோ, அடையாள அட்டைகளோ என்னிடம் யாரும் காட்டவில்லை. ஆவணங்களை கொடுத்தவர் நான் தான் சின்ராஜ் என்று சொன்னதை நம்பி தான் நான் உயில் சாசனத்தை எழுதினேன். கொடுக்கப்பட்ட ஆவணங்களில் முழுமையான சொத்து விபரங்கள் இருந்ததா? என்றால் இருந்தது. அவர்கள் கொடுத்த ஆவணத்தில் இருந்த சொத்து விபரங்களை நான் தயார் செய்த உயில் சாசனத்தில் குறிப்பிட வேண்டாம் என்று அவர்கள் யாரும் சொல்லவில்லை. நான் தயார் செய்த உயில் சாசனத்தில் சொத்து விபரம் காலம் எழுதி, சொத்து விபரங்கள் பற்றி சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். உயில் சாசனம் எழுத வேண்டும் என்று மட்டும் தான் என்னிடம் சொன்னார்கள். அதற்கு முன்னால் என்ன நடந்தது, எதற்காக ஆவணம் எழுதப்படுகிறது என்ற விபரம் சொல்லவில்லை. உயில் சாசனம் எழுத காலை 10 மணிக்கு வந்தனர். உயில் சாசனம் எழுத எனது அலுவலகத்திற்கு சின்னராஜ், குணசேகரன், ரவிராஜ் மற்றும் சாட்சிகள் இருவரும் வந்தனர். சாட்சிகள் யார்? யார்? என்றால் 2003-ல் எழுதப்பட்ட ஆவணம், அதனால் அதில் யார்? யார்? சாட்சிகள் போட்டார்கள் என்று ஞாபகமில்லை. இந்த ஆவணத்தை இது போன்ற பத்திர பேப்பரில் தான் எழுத வேண்டுமென அவர்கள் ஏதேனும் வற்புறுத்தினார்களா? என்றால் இல்லை. பொதுவாக பச்சை தாளிலேயே உயில் சாசனத்தை எழுதி பதிவு செய்யலாம் அல்லது பதிவு செய்யாமல் விடலாம் என்று சொன்னால் சரிதான். உயில் சாசன ஆவணத்திற்கான பத்திர பேப்பரினை என்னிடம் யார் கொடுத்தார்கள் என்றால் சின்னராஜ் தான் கொடுத்தார். அந்த சமயத்தில் அவருக்கு எந்தவித நோய் வாயுமில்லை, இறந்துவிடுவோம் என்ற அச்சமும் அவருக்கில்லை. அவர் நல்ல திடகாத்திரமான உடல் ஆரோக்கியத்துடன் காணப்பட்டார். ஏ.ஓ.சின்னராஜ் தனக்கு உடல்நிலை சரியில்லாமல் போவதாகவும், தான் இறந்துவிடுவேன் என அச்சம் உள்ளதாகவும், அதனால் உயில் சாசனம் எழுத

வேண்டுமென்றும் என்னிடம் ஏதேனும் வாசகம் சொன்னாரா? என்றால் இல்லை. நானாக தான் உயில் சாசனத்தில் உள்ள வாசகங்களை எழுதி அவருக்கு படித்து காண்பித்தேன்.

நீதிமன்ற கேள்வி

பத்திர எழுத்தர் பணி என்பது பத்திர எழுத வரும் நபர்கள் என்ன வாசகம் சொல்லி எழுத சொல்கிறார்களோ, அது சம்மந்தமாக தான் எழுத வேண்டுமே தவிர, அவர்கள் சொல்லாத பட்சத்தில், பத்திர எழுத்தராகிய நீங்களாகவே வாசகங்களை எழுதிக் கொள்ளக் கூடாது என்று சொன்னால்

பதில்

சரிதான்.

வாதி தரப்பின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:-

பொதுவாக பதிவு செய்யப்படாத ஆவணங்களை பொறுத்த வரை, அந்த ஆவணங்களை தயார் செய்த பின்னர், படித்து பார்த்து வாசகங்கள் சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு, கையெழுத்து பெறப்பட்டது என்ற வாசகம் அந்த ஆவணங்களில் இடம் பெறும் என்று சொன்னால், நான் தயார் செய்யும் ஆவணங்களில் அது போன்ற வாசகங்கள் இடம் பெறாது. அதனால், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட உயில் சாசனத்தில் உள்ள வாசகங்கள் ஏ.ஓ.சின்ராஜ் என்பவருக்கு படித்து காண்பிக்கப்பட்டதா? அவ்வாறு படித்து காண்பிக்கப்பட்ட பின்னிட்டு, அவர் சரியென ஒப்புக் கொண்டு தான் கையொப்பம் செய்தார் என்பதை காட்ட என்னுடைய வாய்மொழி சாட்சியத்தை வேறு ஆவண சாட்சி எதுவுமில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் வழங்கப்பட்ட பின்னிட்டும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயில் சாசனத்தில் சொத்துக்கள் பற்றிய விபரம் குறிப்பிடப்படாததற்கு என்ன காரணம் என்றால் காரணங்கள் எதுவுமில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட உயில் சாசனத்தில் ராஜா புளூ மெட்டல்ஸ் என்கிற ஜெல்லி கிரசர் யூனிட்டில் எனது

பங்கை மட்டும் தான் எழுதிக் கொடுப்பதாக வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். உயில் சாசனம் எழுத வரும் பொழுது, பத்திர எழுதும் துறையில் 20 வருடம் அனுபவம் உள்ள நான் உயில் எழுத வரும் நபருக்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளது, அவருக்கு யார்? யார்? வாரிசுகள் என்பவைகள் குறித்து விசாரணை செய்து தெரிந்து கொள்வேனா? என்றால் ஆமாம். இந்த ஆவணத்தை எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் ஏ.ஓ.சின்ராஜுக்கு யார்? யார்? வாரிசுகள் என எனக்கு தெரியுமா? என்றால் தெரியும். அந்த உயில் ஆவணத்திலேயே அவருக்கு ஒரு மனைவியும், இரண்டு மகள்களும் உள்ளதாக வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது. உயில் ஆவணத்தை எழுதிய அன்றே, உயில் ஆவணத்தை ஒப்படைத்துவிட்டேன். சின்ராஜ் என்பவரிடம் தான் ஒப்படைத்தேன். உயில் சாசனம் எழுதிய பின்னிட்டு, தற்போது இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பின்பு தான் மேற்படி உயில் சாசனத்தை எழுதிய விபரமே எனக்கு தெரிய வந்தது. உயில் ஆவணத்தை எழுதிய பின்னிட்டு, இன்று வரையிலான இடைப்பட்ட காலத்தில், மீண்டும் நான் அந்த உயில் சாசனத்தை படித்து பார்க்கவில்லை. இந்த சாட்சிய சம்மனை எதற்காக அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்ள சாட்சிய சம்மனை அனுப்பி வைத்த நபரினை அணுகி நான் ஏதேனும் விசாரித்து தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை. இந்நீதிமன்ற அழைப்பாணை பெற்ற பின்னிட்டு, இன்று தான் முதன்முதலாக நீதிமன்றத்திற்கு வருகிறேன், இதற்கு முன்பு வரவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாகவோ, இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட உயில் சாசனம் சம்மந்தமாகவோ குணசேகரன் என்னை வந்து சந்திக்கவில்லை. இன்று நான் சாட்சியம் சொல்லக் கூடிய அனைத்து விபரங்களும் என்னுடைய ஞாபக சக்தியில் சொல்லக் கூடியவை. நானும், குணசேகரன், ரவிராஜ் மற்றும் இரண்டு சாட்சிகள் சேர்ந்து இந்த உயில் சாசனத்தை மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றும், இந்த உயில் சாசனமானது ஏ.ஓ.சின்ராஜ் எழுதிக் கொடுக்கவேயில்லை என்று சொன்னால் சரியல்ல. உயில் சாசனத்தில் உள்ள கையெழுத்துக்கள் ஏ.ஓ.சின்னராஜுவுடையதே அல்ல என்றால் சரியல்ல. குணசேகரனும், ரவிராஜும் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்கள் சொல்லி நான் உயில் சாசனத்தை மோசடியாக தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(S/d.)மனோகரன்
P.W.4

(S/d.)G.Krishnan,
District Munsif,
Sathyamangalam.